## பத்திரிக்கைச் செய்தி

சமூக பாதுகாப்புத்துறை, ஒருங்கிணைந்த குழந்தைகள் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் செயல்படும், தேனி மாவட்ட இளைஞர் நீதிக்குழுமத்தில் காலியாக உள்ள உதவியாளர் மற்றும் கணினி இயக்குபவர் (Assistant Cum Data Entry Operator) பணியிடம் முற்றிலும் தற்காலிக அடிப்படையில் நிரப்ப 31-05-2021 அன்று மாலை 5.45 மணிக்குள் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

உதவியாளர் மற்றும் கணினி இயக்குபவர் (Assistant Cum Data Entry Operator) பணிக்கு விண்ணப்பிப்போர், பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். தட்டச்சில் தமிழ்/ஆங்கிலத்தில் முதுநிலை தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும் மற்றும் கணினி இயக்கத் தெரிந்திருக்க வேண்டும். 40 வயதிற்கு மேற்பட்டவர்களாக இருத்தல் கூடாது. மாத தொகுப்பூதியம் ரூ.9000/- (ரூபாய் ஒன்பதாயிரம் மட்டும்) வழங்கப்படும்.

தகுதியுள்ள நபர்கள் பாஸ்போர்ட் சைஸ் புகைப்படத்துடன் வரும் 31-05-2021 அன்று மாலை 5.45 மணிக்குள் சுய விபரங்களுடன் விண்ணப்பிக்க கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

கீழ்கண்ட முகவரிக்கு சுய விபர குறிப்புடன் (Bio-Data) விண்ணப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. இது குறித்த மேலும் விவரங்களுக்கு 04546 - 291919 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கிருஷ்ணனுண்ணி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**முகவரி :**

மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர்,
மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலகம்,
ஒருங்கிணைந்த அரசு பல்துறை வளாகம் - II
மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம்,
தேனி - 625 531.
தொடர்பு எண்கள் : 04546 - 291919, 89031 84098.

13/5/21

மாவட்ட ஆட்சித்தலைவர்,
தேனி

13/5/21

2/2

Scanned by TapScanner